**தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத் தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்டதரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம், நிலையான சொத்துக்களின் பயன்படு ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக முழுமையாக | 2020ஆம் ஆண்டின் போது இது தொடர்பில் இனங்காணப்பட்டிருந்த போதிலும், நிலவிய கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமையினுள் அந்த பணியை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன், 2021ஆம் ஆண்டின் போது அகற்றப்பட | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு பெறமானத்தேய்வு தீர்மானிக்கப்பட |

| | | |
|---|---|---|
| தேய்விடப்பட்டிருந்த ரூபா 17,387,806 கிரயமான சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீள்திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டிய சொத்துக்களை கைத்தவிர்ப்பதற்கும், பயன்படுத்தக்கூடிய சொத்துக்களை மீள பயன்படுத்துவதற்கும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டுக்காக கிடைக்க வேண்டிய முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 832,890 குறைவாக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் ஆண்டின் மிகை மற்றும் பெற வேண்டிய வட்டி வருமானம் அந்த அறவினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணிப்பீட்டின் போது இடம்பெற்றுள்ள விட்டுவிடுதல்கள் கடந்த வருடத்தின் சீராக்கங்களாக 2021ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு கணக்காளரின் அறிவுரை கிடைத்தது. | இணங்கிய வட்டி வீதம் மற்றும் சரியான காலப்பகுதியை கருத்திற்கொண்டு வட்டி கணிப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தினால் 2018ஆம் ஆண்டின் போது ரூபா 9,700,000 இற்கு வேன் வண்டியொன்று கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதனை வருடாந்தம் பெறுமானத்தேய்விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வாகனங்களுக்குரிய பெறுமானத்தேய்வு வீதம், குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிராததுடன், வாகனத்தின் கிரய நிறுவனத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குவதுடன், 2020ஆம் ஆண்டின் போது எக்ஸல் ஏடுகள் (excel sheet) மூலம் நிலையான சொத்துக்கள் பதிவேடட்டினைப் பேணும் போது ஏற்பட்ட வழு ஏதிர்காலத்தில் ஏற்படாதிருக்கும் என்பதை உறுதிப்படுத்துகின்றனே. வேன் வண்டியின் 2020ஆம் ஆண்டுக்குரிய பெறுமானத்தேய்வு சீராக்கங்கள் எதிரகாலத்தில் முன்னைய வருட சீராக்கங்களின் கீழ் பதிவு செய்ய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் கொள்வனவு, பெறுமானத்தேய்வு, மற்றும் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | வெகுமதியொன்றின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,650,000 பெறுமதியான மருத்துவ உபகரணங்களுக்குரிய வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 165,000 சொத்துக்கள் கணக்கிலிருந்து குறைக்கப்பட்டிருந்த போதிலும், | இந்த உபகரணங்களை கொள்வனவு செய்த சந்தர்ப்பத்தில் 2018ஆம் ஆண்டின் போது கணக்குகளை மீள திருத்தியமைத்து சமர்ப்பிக்கப்பட்டது. | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்கு வைக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | அந்த பெறமானத்தேய்வினை நிதிச் செயலாற்றல் கூற்றில் செலவினமொன்றாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த பெறுமானத் தேய்விற்கு சமனான அளவினால் வெகுமதி, வருடாந்தம் பெறமானத் தேய்விடப்பட்டு, பிற்போடப்பட்ட வருமானம் (Differed Revenue) ஆக நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தாங்களால் முன்மொழியப்பட்டுள்ளவாறு கணக்கு வைப்பதின் சரியான தன்மையை உறுதிப்படுத்தி, இந்த சொத்தின் பெறுமானத்தேய்வினை கணக்கு வைக்க வேண்டிய முறை தொடர்பில் தெளிவான பரிந்துரையொன்றினை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். | என்பது. |
| (ஈ) | காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது 2020ஆம் ஆண்டுக்காக திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,040,449 ஆன மூலததன மானியங்கள் நிதி நடவடிக்கைகளின் கீழான காசுப் பெறுவனவாக காண்பிக்கப்பட்டிராமை, ரூபா 11,583,055 தொகையான முதலீட்டு வட்டி வருமானம் மற்றும் ரூபா 60,104 தொகையான ஊழியர் கடன் வட்டி வருமானம் மற்றும் உரிய காசுப் பெறுவனவுகள் சரியாக சீராக்கம் செய்யப்படாமை, ரூபா 51,000 தொகையான பொருட்களின் கைத்தவிர்ப்பின் மூலம் கிடைத்த பணம் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படாமை மற்றும் ரூபா 456,020 தொகையான முன்னைய வருடத்தின் சீராக்கங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டமை போன்ற விடயங்களின் காரணமாக காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது உரிய கவனம் செலுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.<br><br>ரூபா 51,000 ஆன தொகை உடைந்த பொருட்களை விற்பனை செய்தமையால் கிடைத்த வருமானமொன்றாவதுடன், முதலீடு அல்ல.<br><br>ரூபா 456,020 தொகையான முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய வட்டி வருமானம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடப்பட்டு முன்னைய வருடத்திற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய சீராக்கமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (உ) | நிறுவனத்தினால் மூலதன மானியங்களை கணக்கு வைப்பதற்கு கணக்கீட்டு கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், பொது திறைசேரியினால் வழங்கப்படும் மூலதன மானியங்கள் முதலில் திறைசேரி மானியங்களாக பதிவு செய்யப்பட்ட பின்னர் கடந்த வருடங்களில் கிடைத்த மானியங்கள் மாத்திரம் உரிய அடிப்படையொன்று இல்லாது மூலதன மானியங்களின் | நிறுவனத்தின் அனைத்து கணக்கீட்டு நடவடிக்கைகளும் Quick Book கணினி மென்பொருளின் ஊடாக கணக்குகளை தயாரிக்கப்படுவதுடன், 2019ஆம் ஆண்டுக்கான மூலதனச் செலவினம் (செலவின) ஏட்டில் சமர்ப்பிக்கப்படும் நிதி அறிக்கைகளில் தனியான பதிவுகளின் கீழ் முன்வைக்கப்பட்டால் அந்த | மூலதன மானியங்களை கணக்கு வைக்கும் கணக்கீட்டு கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியமை மற்றும் அதன் |

| | | |
|---|---|---|
| மீள்நிரப்பலாக திரண்ட நிதியத்திற்கு சேர்க்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக அரச மூலதன மானியங்களின் ஒட்டுமொத்த அளவிற்கு பதிலாக குறித்த வருடத்தில் கிடைத்த மூலதன மானியங்களின் தொகை மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மூலதன மானியங்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் அளவு ரூபா 1,040,449 மாத்திரம் ஆகும். | மூலதனப் பெறுவனவுகள் கணக்கீட்டு முறைமையின் ஊடாக திரண்ட நிதியத்திற்கு தன்னியக்கமான முறையில் சேர்வதுடன், அது கணக்கு கூற்றுகளை சமர்ப்பிக்கும் போது அந்த சீராக்கங்கள் மீண்டும் அதற்கடுத்த வருடத்தின் குறிப்பு இலக்கம் 4 இன் கீழ் திரண்ட மிகை உருவாகிய விதம் விரிவாக முன்வைக்கப்படும். | பிரகாரம் கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2009 இன் 38ஆம் இலக்க தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவக அதிகாரச்சட்டத்தின் 3(1)(க) உப பிரிவு | தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை தொடர்பான தேசிய நியமங்களை நிறுவுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், 2021 ஏப்ரல் 30ஆந் திகதி வரையிலும் இந்த நியமங்கள் நிறுவப்பட்டிருக்கவில்லை. | தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்திற்கு மேலதிகமாக தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி அதிகாரச்சட்டமாக புதிய சட்டமொன்றை கொண்டுவருவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளன. அந்த புதிய அதிகாரச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் குறித்த நியமங்களை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | 2009 இன் 38ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் 16:2 ஆம் பிரிவு | வருடாந்த நிதிக்கூற்றுக்கள், வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரார் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், | 16.2ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் செயலாற்றல் அறிக்கையினை எதிர்வரும் வருடங்களில் கணக்கு அறிக்கைகளுடன் சமர்ப்பிப்பதற்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள், செயலாற்றல் அறிக்கைகளுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவனத்தின் செயற்பாட்டு பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு நிறுத்தி வைக்கப்பட வேண்டிய வங்கி மீதியினை இனங்கண்டு மிகையான பணத்தை ஆக்கபூர்வமான முறையில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால், மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் ரூபா 4.6 மில்லியன் முதல் ரூபா 19.3 மில்லியன் வரையான அளவான பணம் நடைமுறைக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டது. அதன் காரணமாக நிதியத்திற்கு ஈட்டக்கூடியதாக காணப்பட்ட வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | ரூபா 5.9 மில்லியன் தொகையான ஒதுக்கமொன்றினை வைத்திருந்தமைக்கான காரணம் 2020ஆம் ஆண்டின் போது மருத்துவ உபகரணங்கள் மற்றும் கணினி (Laptop) உபகரணங்களை கொள்வனவு செய்ய எதிர்பார்த்தமை ஆகும். தற்போது கணினிகள் (Laptop) கொள்வனவு செய்யப்பட்டுள போதிலும், அவ்வப்போது கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அந்த உபகரணங்களை இறக்குமதி செய்தல் தாமதமடைந்தமையால் முதலீடுகளில் பணத்தை வைப்புச் செய்யும் இயலுமை காணப்படடாமையால், இந்த கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கிடைக்கக்கூடிய வட்டி வருமானம் இழக்கப்பட்டிருக்காமையால் இணங்க முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். எவ்வறான போதிலும், நிறுவனத்தில் உள்ள காசு மீதி தொடர்பில் உரிய மதிப்பீடொன்றை மேற்கொண்ட பின்னர் உரிய முறையில் முதலீடு செய்வதற்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | வங்கி மீதியை இனங்கண்டு மிகையான பணத்தை குறுங்கால முதலீடொன்றில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 11,057,350 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 28,130,642 தொகையாகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 17,073,292 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019ஆம் அண்டுக்குரிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் அனைத்து பொருட்களினதும் பேரேட்டின் பிரகாரம், மீதி மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், உண்மையான மீதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம், பற்றாக்குறைகள் மற்றும் மிகை கணிப்பிடப்பட்டிராததுடன், வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 2019ஆம் அண்டுக்குரிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு தொடர்பில் உண்மையான மீதி பதிவு செய்யப்படாமை இணங்குவதுடன், குழுவின் அங்கத்தவர்களால் அந்த கையொப்பங்களுக்கு முன்னர் (தேவையான பக்கங்களில்) மிகை அல்லது பற்றாக்குறையொன்று இல்லையென குறிப்பிடப்பட்டுள்ளமையை தெரிவித்துக்கொள்கின்றேன். | நி.பி. 757 இன் பிரகாரம் மாதிரிப் படிவம் 66 இன் பிரகாரம் மெய்மையாய்வினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019ஆம் ஆண்டுக்கான நிறுவனத்தின் எழுதுகருவி செலவினம் ரூபா 427,308ஆக காணப்பட்டது. 2020ஆம் ஆண்டின் போது அந்த செலவினம் ரூபா 1,223,216 ஆக காணப்பட்டதுடன், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக களஞ்சியத்தில் எஞ்சியுள்ள எழுதுகருவி இருப்பினை கணக்கிட்டு நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் நிறுவனத்தின் | 2019ஆம் ஆண்டின் ஆரம்ப இருப்பாக காணப்பட்ட ரூபா 644,856 பெறுமதியான எழுதுகருவி இருப்பு 2020ஆம் ஆண்டுக்காக எடுக்கப்பட்டதுடன், 2020ஆம் ஆண்டின் போது எழுதுகருவி செலவினம் ரூபா 578,359 ஆகும். 2020ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட எழுதுகருவிகள் 2021ஆம் ஆண்டின் போது தற்போது | ஆண்டுக்குரிய வருமானத்தினை சரியான முறையில் காண்பிக்கும் வகையில் ஆண்டுக்குரிய செலவினங்கள் மற்றும் எஞ்சிய இருப்பினை கணிப்பிடக்கூடிய வகையில் எழுதுகருவி இருப்பு ஆவணங்களை பேண வேண்டியதுடன், எஞ்சிய இருப்பு |

செயற்பாட்டு பணிகள் 2019ஆம் ஆண்டுக்கு ஒப்பாக குறைவாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், எழுதுகருவி செலவினம் ரூபா 795,908 இனால் அதாவது 186 சதவீதத்தினால் உயர்வடைந்தமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை.

வரையிலும் பயன்படுத்தப்படுவதுடன், 2021ஆம் ஆண்டுக்காக தற்போது வரையிலும் செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா 68,694 ஆகும். பதிவேடுகளை உரிய முறையில் பேணுவதற்கான அறிவுரை வழங்கப்பட்டது.

காணப்படும் எனின் அது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும்.